1.ஆண்டவர் இல்லம் (வருகைப்பாடல்)

பாடல்: Dr.சேவியர்
இசை: மார்ட்டின் பிராண்சிஸ்
பாடியவர்: இர்வின் விக்டோரியா
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

ஆண்டவர் இல்லம் செல்வோம் என்றே
அழைப்பினைக் கேட்டதும் அகம் மகிழ்ந்தேன்
மீட்பினைத் தந்திட மண்ணில் வந்த
மன்னனைப் பார்த்திட மனம் நெகிழ்ந்தேன்
வாருங்கள் இறைவனின் வாசலிலே
வாழ்வதன் வாசலாம் இயேசுவிலே

1. உந்தன் உறைவிடம் அழகானது
   எந்தன் மறைவிடம் அதுவானது
   ஆலய முற்றம் எழிலானது
   அதுவே எந்தன் மகிழ்வானது.
   வேற்றிடம் வாழும் ஆயிரம் நாள்
   வேண்டாம் என்றே நீங்கிடுவேன்
   ஆலயம் வாழும் ஒரே நாளே
   மேலான தென்றே தங்கிடுவேன்
   வாருங்கள் இறைவனின் நேசத்திலே
   நேசத்தின் நேசராம் இயேசுவிலே

   விண்ணகத் தந்தையின் உயிரானது
   அன்னையின் வழியாய் உருவானது
   விண்ணக வாழ்வு நிலையானது
   மீட்பரின் வாழ்வே விலையானது
   நானும் எந்தன் வீட்டாருமோ
   உமக்கே ஊழியம் செய்திடுவோம்
   படைகளின் ஆண்டவர் உம்மிடமே
   அடைக்கலமாக வந்திடுவோம்
   வாருங்கள் இறைவனின் கோயிலிலே
   கோயிலின் கோமகன் இயேசுவிலே